**நாணயச் சபை**

**இலங்கை மத்திய வங்கி**

**2021 ஏப்பிறல் 23 வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2021இன் 06ஆம் இலக்கம்**

---

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கயினால் இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் செய்யப்படும் முதலீடுகள்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1)ஆம் பிரிவுகளினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளுக்கிணங்க விடுக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி, வெளிநாட்டுச் செலாவணி மீதான அழுத்தத்தினைத் தளர்த்தும் நோக்குடனும் வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சல்களின் சாத்தியமான/ வாய்ப்பான கணிசமான தொகையையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீது இதன் தாக்கத்தினையும் பரிசீலனையில் கொண்டு இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கொள்வனவினை மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்துமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் தேசிய சேமிப்பு வங்கியையும் கேட்டுக் கொள்கிறது.

ஒப்பம்
**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்